பதிவு எண்— M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு.- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை—8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: பங்குனி ௩ 16—3—56 தளிர்—21

திருக்குறள் பிழிவு:

நாட்டுக்கு வளம்

நாட்டு வளத்துக்கு நேர்மையான நல்லாட்சி வேண்டும் என்பது சொல்லாமலே பெறப்படும்; திருக்குறள் பொருட்பாலில், எடுத்த எடுப்பில் 'இறை மாட்சி' என்று அரசியல் தொடங்குதலை யாரும் அறிவர்.

அதனால் அரசியலில் பணி புரிவார்க்கும் குடிமக்களுக்கும் நற் பண்புகள் வளரும். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை, மானம், எளிமை, இனிமை, முறைமை, கடமை, கண்ணோட்டம், முயற்சி, நட்பு, முதலிய தகுதிகள் அமையும்.

நற்பண்புகள் இப்படி அமைந்தால் இப் பண்பட்ட தகுதியை அடிப்படையாகக் கொண்டு, குற்றங் கடிந்து பெரியாரைத் துணைக்கொண்டு தெரிந்து செயல் புரியும் தொழில் முறைகள் கூடிவரும்; வலிமை காலம் இடம் முதலியன தேர்ந்தும் தெளிந்தும் சுற்றம் தழுவிக் கருத்தாய், யாவரிடத்தும் கண்ணோடி இடுக்கண் பொறுத்து எல்லாரும் வகையாகச் செயல்புரிவர்.

இதனால் நாடு பொருள் வளம் ஊற்றெடுக்கும்: இன்பமும் அறமும் ஓங்கும். பொருள் முதலியன விளைவதுபோலவே அதற்கு அடிப்படையான பண்புகளும் சான்றோரும் மேலு மேலும் ஓங்கக் காணலாம். நாடு இவ் வகைகளால் மிக்க வலிமையுடையதாய்த் திகழும்!

எந்த மூலையிலும் நாட்டில் பசி இராது, பிணி இராது, பகை இராது; பண்புகளை அடிப்படையாகக் கொண்டு அதன்மேல் எழுப்பப்படும் பொருளாதார முயற்சிகள்தாம் இப்படி சிறக்கும். குடிமக்களும் அரசும் ஒன்றி இவ்வாறு அன்பொடும் அருளொடும் செய்யாத பொருளாக்கம் புரளவிடல் என்பர் வள்ளுவர்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

உள்நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்	ரூ.	0 1 0

ஆயுள்—
கையொப்பம் • ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''
—புறநானூறு.

கிளை 8	மன்மத, 16-3-56	தளிர் 21

வேடன் தாங்கல்

சென்னையிலிருந்து 50மைல் தெற்கே செங்கல்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலுக்கா கருங்குழி கிராமத்தைச் சேர்ந்ததோரிடமே வேடன்தாங்கல் என்பது.

சென்னையிலிருந்து பஸ்ஸிலோ அல்லது ரயிலிலோ இவ்விடத்தை அடையலாம். கருங்குழி பஸ் ரஸ்தாவிலேயே அண்ணமார் கோவிலுக்குப் பக்கத்திலேயே வேடன் தாங்கலுக்கு வழி போகிறது. அவ்வழியின் மூலம் 2 மைல் மேற்கிலும், 2மைல் தெற்கிலும் சென்றால் மேற்படி வேடன் தாங்கல் கிராமத்தை யடையலாம். பண்டையில் வகுளாரண்யம் என்று வழங்கப்பட்டது தான் இன்றைய மதுராந்தகம் தாலுக்கா, வகுளாரண்யம் என்ற பெயரே முன் காலத்தில் இங்குப் பெரியதோர்காடும் ஏரியும் இருந்திருக்க வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகிறது, (வகுளம் ஆரண்யம் —மகிழமரம் காடு; இவ்விடம் மதுரசம் பொருந்திய பல புண்ணிய தீர்த்தங்கள் மலிந்திருப்பதால் மதுராந்தகம் என்றொரு காரணப் பெயரும் புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

வேடன்தாங்கல் என்ற ஏரியும், கிராமமும் பல நூற்றுண்டுகளாக இருக்கின்றன என்றும் வேடர்களைத் தாங்கி நின்றதனுலேயே பண்டைக் காலம் முதற்கொண்டே வேடன் தாங்கல் என்ற காரணப்பெயர் வழங்கி வந்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

மதுராந்தகம் ஏரிக்குப் பக்கத்திலேயே இந்த வேடன் தாங்கல் ஏரி அமைந்திருக்கிறது. அதன் சுற்றளவு சுமார் மூன்று மைல், அதன் நடுவில் தீவுகளைப்போல் 500 கடப்பை மரங்கள் இன்றுமிருக்கின்றன. அந்த மரங்கள் நன்ருக வளர்ந்த வேப்ப மரங்களின் அளவுக்கு நடு ஏரியில் வளர்ந்திருக்கின்றன. சுமார் ஆறு மாதங்கள் வரையில் அம்மரங்களின் அடிப்பாகத்தின் உயரத்திற்கு ஏரியில்தண்ணீர் நிறைந்திருக்கிறது.

பலவிதப் பறவைகள்

இந்த 5000 மரங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஆயிரம் பறவைகளுக்கு மேலிருக்கின்றன. ஆனல் ஒரே சாதிப்பறவைகள் என்று சொல்வதற்கில்லை. எல்லாப் பறவைகளும் தண்ணீர்ப் பறவைகள் என்று மட்டும் கூறலாம். இரவில் ஆகாரம்தேடிப் பகலில் காவல் காக்கும் பறவைகளும், பகலில் உணவு தேடும் பறைவைகளும் கலந்து இருக்கின்றன இங்கு. சில பறவைகள் உருவத்தில் பெரியவாகவும் சில சிறியவாகவும், இருக்கின்றன. சிலவற்றின் தேகம் நீண்டும் உருண்டையாகவும், சில தட்டையாகவுமிருக்கின்றன.

சில பறவைகளுக்குப் படகைப்போல் தேகமும், அலகும் அமைந்திருப்பதால் தண்ணீருக்குள் பாய்ந்து செல்ல வசதியாக இருக்கிறது.

சில பறவைகளின் அலகுகள் தட்டையாகவும் குட்டையாகவும் கூராக நீண்டும், சில வளைந்தும், சில முனையில் மட்டும் வளைந்துமிருக்கின்றன, சில பறவைகளுக்கு அலகுக்குக் கீழ் பைபோல் தோல் வளர்ந்திருக்கிறது. சிலவற்றின் அலகுகள் கரண்டி போலவும் உலக்கைபோலும் அமைந்துள்ளன. அந்தந்தப் பறவைகளுக்கு அமைந்திருக்கும் அலகுகள் தண்ணீருக்குள்ளிருக்கும் ஆகாரங்கள் வழுக்கி விழாமலிருப்பதற்கு ஏற்றதாகவும் தங்கள் கூடுகளைப் பின்னிக் கட்டிக் கொள்ளக் கூடியதாகவும், சமயததில் தண்

உருக்கம் – கரைக்கும், 24
உருத்திர சன்மகண்ணர், 31
உருத்திரசன்மர்– உருத்திரனல் அடைந்த சன்மத்தை யுடையர் 1 [உ] முருகக் கடவுள் திருவவதாரமாய் வணிகர்மரபில் தோன்றிய மூங்கைப் பிள்ளையார்
உரு வல் அரண் – உருவத்திடம் உடைய அரண், 26
உலக்கைப் பாட்டு – மகளிர் பரிமளப் பொடி இடிக்கின்ற போது பாடும் பாட்டு, 5 உ
உலகடைய – எவ்வுலகத்தாரும், 53
உலகம் கொள்ள – உலகத்தார் எளிதின் உணரும்படி, 33
உலகிற்கு– உலகத்தாருக்கு,28
உள் இருள் – அகத்திருளை, 47 அஞ்ஞானத்தை;
உள்ள அரிதென்று –[பழைய வேதம்] ஓதி உணரப்படுதற்கரிதென்று, 33 காரணம் அற முதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன்றுமை; [உ]
உள்ளக் கமலம் – நெஞ்சமாகிய தாமரை, 48
உள்ளுதல் – சிந்தித்துக் கொள்ளுதல், 17 கேட்டல் இதனில் அடங்கும் [உ]
உள்ளுவ வெல்லாம் – நினைக்கப்பட்டவற்றையெல்லாம் 6
உறுதிப் பொருள் – இம்மை மறுமை வீடுகளைக் குறித்துணர்தற்குரியன. 50 [உ]
உறையூர், சோழன் தலைநகர், 10 உ
உறையூர் முதுகூற்றனர், 39

ஊ

ஊர் – திரிகின்ற, 46
ஊழின் – முறையால், 7
ஊறும் – வளரும், 31

எ

எண்பொருள் – எண்ணப்பட்ட பொருட்பால், 26
எப் பாலவரும் – எவ்வகைப்பட்ட பகுதியோரும், 9
எப்பாலும் – எவ்விடத்திலும், 19
எப் பாவலரினும் இல் – எவ்வகைப்பட்ட புலவருள்ளும் இல்லை, 17, 18
எல்லாப் பொருளும் –பலவகை நூல்களாலும் சொல்லப்பட்ட எல்லாப் பொருளும் 29 தொழிலும் பண்பும் ஒரோவழிப் பொருளெனற் கேற்புடைமையின் அவையும் இவற்றுள் அடங்கும், உ
எள்ளல் – இகழ்தல், 20

மெய்ப் பொருள் உணர்ந்தன்றி எவ்வுலகத்தார்க்கும் வீட்டின்பம் பெறுதல் கூடாமையின், எல்லா உலகத்தாரும் திருக்குறளை அறிவர் என்பது மெய்; அன்றி, அவ்வுலகத்துத் தேவர்களும் தமது மேற்பட்ட அறிவினலே திருக்குறளின் உயர்வு ஒப்பற்ற குணத்தை அறிந்து முக்கிய வழிகாட்டியாக (முக்கியப் பிரமாணமாகக்) கொண்டு மகிழ்கூர்தலும் பொருந்தும். திருக்குறள் இவ்வுலகத்தார்க்கேயன்றி அவ்வுலகத்தார்க்கும் எவ்வுலகத்தார்க்கும் பயனாய் உள்ளது! திருக்குறள் கருத்துக்களின் விரிவு அளவுபடாதது!

—திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர்

இயற்றமிழ் – சேரனுடையது; தமிழர் மூவர்க்கும் பொதுவாயினும் சேரன் குடிமரபிற்கு உரிமை இயைந்தது, 10 (உ)

இயைபு – நூலழகின் வகை, 45 (உ)

இரண்டும் – இரண்டின் காரணங்களையும், 35

இரவி – சூரியன், 52

இராம கதை, 30

இருகுறள் – இருவகை விகற்பமுடைய குறள், 44

இருபால் – இருபாற் கூற்று, 27

இல்பொருளுவமை, 54 உ

இழிகட் பெருங்கண்ணனார், 40

இழுக்கு – வழுவுதல், 45

இழைபு – நூலழகின் வகை, 45 உ

இறையனார், 3

இன்குறள் – குறியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம் விளையாதது, 32 (உ)

இன்பத் திறம் – காமத்தின் கூறுபாடு, 37

இன்பத்தின் காரணம் – இது விதிக்குறளால் விளங்கும், 35 உ

இன்பம் – காமம், 20

இன்பம் பொருளறம் வீடு 33

இன்பம் பொருளறம் வீடு என்னும் இந் நான்கும் முன்பு அறியச் சொன்ன முதுமொழி நூல், 33

இன்பு – காமம், 47

இன்றியமையாச் சிறப்பிற்று, 29 [உ]

இனிய – இன்பஞ் செய்வன, 51

உ

உக்கிரப் பெருவழுதியார், 4

உண – உண்ண, 31

உத்தர மதுரை, 21

உத்தர வேதம் – திருக்குறள், 2 [உ]

உதாத்தம் அநுதாத்தம் சுவரிதம் என்னும் சுரங்கள். 15 [உ]

உப்பக்கம் – அப்பக்கம், 21

உபகேசி – உமாதேவி; கேசிக்குப் [திருமாலுக்குப்] பின்னே பிறந்தவள் உபகேசி; 'உபேந்திரன்' என்பதுபோல; நப்பின்னை என்பாரும் உளர். 21 [உ]

உபகேசி தோள் மணந்தான் – சிவபிரான்; நப்பின்னை தோள் மணந்த கண்ணபிரான் என்பாரும் உளர் 21 [உ]

உபேந்திரன், 21 [உ]

உம்பல் – யானை, 36

உயல் – வாழ்தல், 39

ஆ

ஆக்கப் பொருள், *29* (உ)
ஆகாதன – துன்பத்தைத் தருவன, *41*
ஆர் – தங்கிய, *50*
ஆரியம் – வடமொழி, *42*
ஆரியமும் செந்தமிழும் – வடமொழியும் தென்மொழியும்; இவை பிறமொழிகள் போலாது பாணினியாரும் அகத்தியனாரும் முதலாகிய முனிவர்களாலே செயப்பட்ட இலக்கண நூல்களாலே சீர்திருந்தி நிற்றல் முதலிய குணங்களுடையன. வடமொழி பிராகிருதம் முதலியவற்றுக்கு முதல்; தென்மொழியும், ஆந்திரம் முதலியவற்றுக்கு முதல்; வேதமுடைமை பற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக்கண்ணே திருக்குறள் உண்டாதலின் இனி இல்லை; *42* (உ)
ஆரோபிக்கப்பட்டது *21* (உ)
ஆண் பால் – ஆண்பாற் கூற்று, *27*
ஆடகம் – பொன்வகை, *36* (உ)
ஆசிரியர் நல்லந்துவனார், *18*
ஆலங்குடி வங்கனார், *53*
ஆவன – இன்பத்தைத் தருவன, *41*
ஆழமுடைமை, *24* (உ)
ஆற்றல் – சொற் செறிவின் திட்பம், *15*
ஆற்றும் – செய்யும், *7*
ஆன் உருபின் பொருளில் வந்தது, *14* (உ)
ஆன்ற – மேம்பட்ட, *47*
ஆனா – நீங்காத, *7*

இ

இக்காலம் – ஆயுள் நீட்சியும் உணர்வு வலியும் தேயுங் காலமாகிய 'அவசர்ப்பிணி' என்னும் இக்காலம், *33* (உ)
இசைத் தமிழ் – சோழனுடையது; தமிழரசர் மூவர்க்கும் பொதுவாயினும் சோழன் குடிமரபிற்கு உரிமை இயைந்தது, *10* (உ)
இடைக்காடர் – தமது பாடலை அரசன் மதியாமைபற்றிப் பிணங்கி வடக்கே சென்றவர். *21* (உ)
இடைக்காடர் பாடல், *54*
இம்மை மறுமை – இகபரங் கட் காவன, *40*

உரைச் சிறப்புப் பாயிரம்

திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி — விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனும்
மன்னும் உயர்நாமன் வந்து.

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ —நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி.

நாயனார் பெயர்கள்

திருவள்ளுவர்
நாயனார்
தேவர்
முதற்பாவலர்
தெய்வப் புலவர்
நான்முகனார்
மாதாநுபங்கி
செந்நாப்போதார்
பெருநாவலர்
பொய்யில்புலவர்

திருக்குறள் பெயர்கள்

திருக்குறள்
முப்பானூல்
உத்தரவேதம்
தெய்வ நூல்
திருவள்ளுவர்
பொய்யா மொழி
வாயுறை வாழ்த்து
தமிழ் மறை
பொது மறை
திருவள்ளுவப் பயன்

திருவள்ளுவ மாலை யுரை

அருஞ்சொற் பொருள் அகரவரிசை

(எண், பாட்டின் எண்கள்)

அ

அக்காரக்கனி நச்சுமனார், 46
அகத்திருள் நீக்கத் திருக்குறள் ஒன்றே உள்ளது, 52 (உ)
அகலிடத்தோர் - மண்ணுலகத்துள்ளோர், 38
அகிலத்தோர் - உலகத்தோர், 52
அச்சு - ஆதாரம், 21
அசரீரி - அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதல் தெய்வம்' 1 (உ)
அணி - சொல்லணி பொருளணி ஒலியணி, 45
அணுவை, 55
அந் தாமரை - அழகிய தாமரை மலர், 28
அப்பால் - அப்பாற்பட்ட, வேறு, 12 (உ)
அம்மை - நூல் அழகுகளில் ஒருவகை, 45 (உ)
அமரர் - தேவர், 36;
அமரர் உம்பல் - அயிரா வதம்.
அரிசில் கிழார், 13
அரிதாகி - அரிய பொருள்களை உடையதாகி, 24
அருமறை - ஓதியுணர முடிவு போகாத அருமையுடைய வேதம், வேறு வேறான அதிகாரிகளுடைய அருமையோடு கூடியது, 44
அருமுனி - வசிட்டர், 36
அருமுனி ஆ - வசிட்டமுனியிடத்துள்ள காமதேநு, 36
அவிழ் - விரிந்த, 32
அழகு - நூலின் அழகு வகை 45 (உ)
அழுக்கு - குற்றம், 37
அலகு - பறவைப் பேடுகள், 5
அளாய் - கலந்து, 11
அற்புதமான குண முடைமை, 24 (உ)
அறநூல் பொருள்நூல் இன்பநூல் வீட்டு நூல், 29 (உ)
அறிவுற - அறிய, 30
அன்மொழித் தொகைகள், 23 (உ)
அன்றே - பலரறி தேற்றம், 10 (உ)

ணீரைத் தங்கள் அலகுகளால் துடுப்பைப்போல் தள்ளி நீந்தக்கூடியதாகவும் அமைந்திருக்கின்றன. சில பறவைகளுக்கு உடலுக்கேற்றதாக அலகு அமையவில்லையே என்று சிந்திக்கவும் தோன்றுகிறது. உடலைக் காட்டிலும் மூன்று பங்கு அலகு நீளமாகவும் சில பறவைகளுக்கு இருக்கின்றன.

வித வித வால்கள், வர்ணங்கள்

தேகத்தின் அளவில் மூன்று மடங்கு வால் நீண்ட பறவைகள் இருக்கின்றன. சில பறவைகளுக்கு வால் விசிறி விரித்தாற்போலவும், சில நீண்டும், சில குட்டையாகவும், சில துடைப்பம் கட்டி இருப்பதைப் போலவும், சில பறவைகளின் வால் இரட்டை சடைப் பின்னல் போட்டதைப் போலவும், மற்றும் சில பறவைகளுக்கு வாலே கிடையாதோ என்று ஐயுறும்படியாகவும் சில பறவைகளுக்குத் தங்கள் வாலே துடுப்புப்போல் தண்ணீரில் நீந்திச் செல்லவும் உபயோகப்படுத்தும் படியாகவுமிருக்கின்றன.

கழுத்து குட்டையாகவும் தேகத்திலேயே அமைந்திருப்பதுபோலவும் உள்ளன சில பறவைகளுக்கு; மற்றும் சிலவற்றுக்குக் கழுத்து மட்டும் ஒரு கஜம் நீளமாக வேண்டிய போது நீட்டவும், மற்ற நேரங்களில் சுருக்கிக் கொள்ளவும் (புதர்களிலும், மரக்கிளைகளிலும் உட்கார்ந்தவாறே தங்கள் ஆகாரங்களைப் பிடிப்பதற்கும் உபயோகப்படும்படியான அளவுக்கு நீட்டவும், சுருக்கவும்) கூடியதாயிருக்கின்றன. சில பறவைகள் தண்ணீரைவிட்டுக் கரையிலிருக்கும் புதர்களில் முட்டையிட்டு அடை காக்கும்போது தேகத்தைப் புதரில் மறைத்துக் கொண்டு தலையை மட்டும் தூக்கிப் பார்ப்பதற்கு வேண்டிய அளவு சுமார் 2 அடி நீண்டுமிருக்கின்றன.

பறவைகளின் தேகத்தைக்காட்டிலும், கால்கள் 2-3 அடி நீண்டிருக்கின்றன. சாதாரணமாகக் கால்கள் நீண்டிருக்கும் பறவைகளுக்குக் கழுத்தும் நீண்டிருக்கிறது. சில பறவைகளுக்கு வாத்தைப் போல் கால் விரல்களில் தோல் வளர்ந்திருக்கிறது.

பறவைகள் பறக்கும் போது தெரியும்படியான வர்ணங்களை உட்கார்ந்திருக்கும் போதும், உட்கார்ந்திருக்கும் போது தெரியும் வர்ணங்கள் பறக்கும்போதும் தெரியவில்லை. இவை தங்கள் சிறகுகளை வெயிலில் உலர்த்தும் போது பல வர்ணங்களைக் காணலாம்.

பறவைகளின் பெயர்கள்

இங்குக் காணும்படியான பறவைகளுக்கு உண்மைப் பெயர் தெரியாததாலும் எந்நாட்டுப் பறவைகள் இங்கு வருகின்றனவென்று சரியாகத் தெரியாததாலும் கிராமவாசிகளே சில பெயர்களை இப்பறவைகளுக்கு வைத்துள்ளார்கள். இவற்றில் சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடுகிறேன்:—

1. அரிவாள் மூக்கன், 2. மமுட்டி (மண்வெட்டி) வாயன் (அலகு தட்டையாக இருக்கும்) 3. கலிக்கோ 4. நீர்க்காக்கை, 5. நாராயணப் பறவை, 6. நத்தை குத்தி, 7. பாம்பு நாரை, 8. வக்கா (இந்தப் பறவை மட்டும் இரவில் தான் ஆகாரம் தேடும், பகலில் கூண்டிலிருக்கும்)9. கிளுவை 10. பூநாரை 11. வெள்ளை, 12. திளுவை 13. சொருக் குருவி, 14. வயல்நாரை 15. நீர்க்கோழி 16. குருட்டுக் கொக்கு, 17. சாரைக் கொக்கு, 18 சாத்திக் கொங்கான், 19 மத்தாளிக் கொக்கு, (இதுதான் உருவத்தில் பெரியது. சுமார் ஒரு ஆள் உயரமிருக்கிறது) 20. நாமக்கோழி, 21. பட்டகிளுவை 22. தண்ணீர் உள்ளான் (உருவத்தில் கோழி போலிருக்கும்) 23. நீர்வாத்து.

இவைகளில் நீர்க்காக்கை, நாராயணப் பறவை, கிளுவை மூன்று பறவைகளும் எண்ணிக்கையில் மற்றப் பறவைகளைக் காட்டிலும் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. இது சுமார் ஒரு லட்சத்திற்குமேலிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

வருடத்தில் மேலே குறிப்பிட்ட காலங்களில் மட்டும்குறைந்ததுஇரண்டு லட்சம் பறவைகள் வருவதும் கூட்டம் கூட்டமாகப் போவதுமாக இருக்கின்றன. ஒரு கூட்டத்தில்

சுமார் 500 பறவைகளுக்கு மேல் இருக்கின்றன.

போர் வீரர்கள் அணி வகுத்துக் கோட்டையைப் பிடிப்பதுபோல் சுமார் இருநூறு, முந்நூறு நீர்க் காக்கைகள் முதலில் சுமார் நூறு கஜம் சுற்றளவுள்ளதோர் வட்டமாக உட்காருகின்றன. பிறகு எல்லா நீர்க்காக்கைகளும் வட்டமாகவே ஒவ்வொரு அடியாகத் தண்ணீருக்குள் வட்டத்தைக் குறைத்துக் கொண்டு வருகின்றன. அதே நேரத்தில் வட்டத்திலிருக்கும் சில பறவைகள் தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கி மீன்களை மத்தியில் சேர்க்கின்றன. கடைசியில் வட்டம் ஓரளவுக்குச் சிறியதாக வந்ததும், மீன்களும் பறவைகளின் வட்டத்திற்குள் சிக்கிக் கொண்டது என்றுதெரிந்ததும்,எல்லாப் பறவைகளும் தண்ணீரில் மூழ்கிச் சிறிது நேரத்தில் மேலே கிளம்புகின்றன. ஒவ்வொரு நீர்க்காக்கையின்வாயிலும் தவறாதுஒரு மீனைக் காணலாம் அப்போது இவ்வாறு ஓரிடத்தை முற்றுகையிட்டு மீனைப் பிடித்த பின் எல்லாப் பறவைகளும் பறந்து சென்று மற்றோரிடத்தில் முற்றுகை இடுகின்றன.

இங்குமட்டும் வருவதேன்?

ஒவ்வோராண்டும் செப்டம்பர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையில் மழை பெய்து ஏரி நிரம்பியது என்று தெரிந்ததும் சாதிப் பறவைகள் கூட்டம் கூட்டமாக வேடன் தாங்கலுக்கு வர ஆரம்பிக்கின்றன. ஆனால், வெகு தூரத்திலிருந்து வரும்பறவைகளுக்கு ஏரி நிரம்பியிருப்பது எப்படித் தெரியும்? முதலில் சில பறவைகள் மட்டும் வருகின்றன என்றும்மற்றவை தொடர்கின்றனவென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். எப்படியோ வருடந் தவறாமல் அவை வந்துவிடுகின்றன. அப்படி அவை குழுமுவதற்குக் காரணமென்ன? — வேடன் தாங்கலிலுள்ள சுமார் ஆயிரம் கிராமவாசிகளும் ஸ்ரீ வெங்கட்ட சுப்ப ரெட்டியார் எம். எல். ஏ அவர்களின் குடும்பத்தினரும் தலைமுறை தலைமுறையாக—குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில்— இரவும் பகலும் காவல் காப்பதாலேயே இப்பறவைகள் இங்கு வருகின்றனவெனலாம். நம்மைப் பிடிப்பாரும் சுடுவாருமில்லை என்று தைரியமாக அவை வருகின்றன. அப்படியாராவது சுட்டாலும் சரி, அல்லது தண்ணீர் குறைந்திருக்கும்போது இரவில் பிடிக்கச் சென்றாலும் சரி, எல்லாப் பறவைகளும் தட்சணமே எழுந்து பறந்து வேடந்தாங்கல் கிராமவாசிகளிருக்கும் வீடுகளின் மேல் வட்டமிட ஆரம்பிக்குமாம். பறவைகளின் கூக்குரலைக் கேட்டதும், இரவாக இருந்தாலும் சரி பகலாக இருந்தாலும் சரி உடனே சென்று அந்த ஆளைப் பிடித்து விடுவார்களாம் ஆளைப் பிடித்ததும் பறவைகள் பழைபடி தங்கள் கூடுகளை நாடிப் பறக்க ஆரம்பித்துவிடுமாம். ஏரியில் கிராமவாசிகளின் அனுமதி இல்லாமல் சுடவோ பிடிக்கவோ இன்றும் என்றும் முடியாது. 'வரும்'

'சு'

Phone 55034 Tel Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்.
53, கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)